# <u>பத்திரிக்கை செய்தி</u>

## <u>கால்நடை பராமரிப்புத்துறை</u>

கடலூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையில் 34 கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணியிடம் காலியாக உள்ளது. கடந்த 2015 ஜுலை 1–ம் தேதி நிலவரப்படி பத்தாம் வகுப்பு படித்த 18 முதல் 30 வயது வரையுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். எஸ்.சி., எஸ்.டி., பிரிவில் 35 வயது வரையுள்ளவர்களும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் 32 வயது வரையுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்தை கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக www.cuddalore.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, கால்நடை பெருமருத்துவமனை வளாகம், புதுப்பாளையம் மெயின் ரோடு, கடலூர்–607 001 என்ற முகவரிக்கு பிப்ரவரி 28.02.2018ஆம் தேதி மாலை 5.45 மணிக்குள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் நேர்காணல் மூலமாகவே தேர்வுகள் நடைபெறும்.

நேர்காணலில் அதிக மதிப்பெண் பெறும் விண்ணப்பதாரர்கள் இனச்சுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

<u>தமிழ்நாடு அரசு</u>

<u>கால்நடை பராமரிப்புத்துறை, கடலூர் மாவட்டம்</u>

<u>கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிக்கான விண்ணப்ப படிவம்</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | i) விண்ணப்பதாரரின் பெயர் | | புகைப்படம் |
| | ii) பாலினம் | ஆண்/பெண்/திருநங்கை | |
| 2. | தந்தை பெயர்/ கணவர் பெயர் | | |
| 3. | நிலையான முகவரி<br>(அஞ்சலக குறியீட்டு எண்ணுடன்) | | |
| 4. | சொந்த மாவட்டம் | | |
| 5. | i) தொலைபேசி எண்<br>ii) கைபேசி எண்<br>iii) மின்னஞ்சல் முகவரி | | |
| 6. | i) பிறந்த தேதி<br>ii) வயது<br>(01.07.2015 அன்று உள்ளபடி) | | |
| 7. | i) அரசு பணிகளில் சேர முன்னுரிமை பெற்றவரா ? | ஆம்/ இல்லை | |
| | ii) முன்னுரிமை பெற்றவர் எனில் எந்த வகையான முன்னுரிமை, (ஆதாரமாக சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | கணவனால் கைவிடப்பட்டவர் / | |
| | | ஆதரவற்ற விதவை | |
| | | மாற்றுத் திறனாளி (இயலாமையின் சதவீதத்திற்கு ஆதாரமாக சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| | | கலப்புத் திருமண தம்பதி | |
| | | முன்னாள் இராணுவத்தினர் | |
| | | பிற முன்னுரிமையுள்ளவர் (முன்னுரிமையினை தவறாமல் குறிப்பிட வேண்டும்) | |
| 8. | கல்வித்தகுதி மற்றும் கூடுதல் தகுதிகள் | | |

| | | |
|---|---|---|
| 9. | i) மதம் | இந்து / இஸ்லாம் / கிறிஸ்தவம் / பௌத்தம் /<br>பிற வகுப்பு / ஜாதி |
| | ii) வகுப்பு / உட்பிரிவு சாதி | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ( அருந்ததியினர் ) |
| | | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் |
| | | பழங்குடியினர் |
| | | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் |
| | | பிற்பட்ட வகுப்பினர் |
| | | பிற்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) |
| | | பொதுப்பிரிவினர் |
| 10. | i) விண்ணப்பதாரர் மீது குற்றவியல் வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளதா ? | ஆம் / இல்லை |
| | ii) ஆம் எனில் விவரங்கள் தரவும் | |
| 11. | i) விண்ணப்பதாரர் குற்றவழக்கில் (Criminal Case) ஏதேனும் தண்டனை பெற்றவரா ? | ஆம் / இல்லை |
| | ii) ஆம் எனில் விவரங்கள் தரவும் | |
| 12. | சான்றுகள் | 1. 10ம் வகுப்பு மதிப்பெண் சான்று நகல் |
| | | 2. சாதிச் சான்று நகல் |
| | | 3. முன்னுரிமைச் சான்று நகல் (பொருந்தும் நேர்வில்) |
| | | 4. மாற்றுத் திறனாளி சான்றிதழ் |
| | | 5. இருப்பிடச்சான்று |
| 13. | <u>உறுதிமொழி</u><br>மேற்குறிப்பிட்டுள்ள என்னால் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவைகள் எனவும் இதனில் ஏதேனும் தவறு என பின்னர் தெரியவந்தால் அதனால் எடுக்கப்படும் எல்லா வகையான நடவடிக்கைக்கும் நான் உட்படுவேன் என உறுதியளிக்கின்றேன்.<br><br>நாள்: – விண்ணப்பதாரர் கையொப்பம் | |

## கால்நடை பராமரிப்புத்துறை – கடலூர் மாவட்டம்

## கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிக்கான நேர்முகத் தேர்விற்கான அழைப்புக் கடிதம்

1. பிறந்த தேதி :

2. பெயர் / தகப்பனார் பெயர் :

3. முகவரி :

புகைப்படம்

மண்டல இணை இயக்குநர் (கூ/பொ),
கால்நடை பராமரிப்புத்துறை,
கடலூர்
கடலூர் மாவட்டம்
அ.கு.எண்.607 001.

## கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிப்போர் விதிமுறைகள்

| | | |
|---|---|---|
| | | கடலூர் மாவட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை – 34<br>மாவட்ட இன சுழற்சியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும். |
| 1 | | வயது வரம்பு – குறைந்த பட்ச வயது 18 ஆகும். அதிகபட்ச வயது அருந்ததியர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் வகுப்பினர்களுக்கு 35 ஆகும். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம் ) 32 ஆகும். பொதுப்பிரிவினருக்கு 30 ஆகும். (01.07.2015 அன்றுள்ளபடி) |
| 2 | | கல்வித்தகுதி –– குறைந்த பட்ச கல்வித்தகுதி 10–ம் வகுப்பு படித்திருக்க வேண்டும்.<br>(தேர்ச்சி பெற்றவர்/ தேர்ச்சி பெறாதவர்) |
| 3 | | ஏற்கனவே பணிபுரிந்த அரசுத்துறை / அரசு அலுவலகத்திலிருந்து குற்றசாட்டுகளின் அடிப்படையில் பணிநீக்கம் செய்யப்பட்டிருப்பின் அம்மனுதாரர்களின் மனு நிராகரிக்கப்படும். |
| 4 | 1. | குற்ற வழக்குகள், நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் அரசியலில் பங்கேற்று அதற்கான தண்டனை பெற்றவர் மனு நிராகரிக்கப்படும். |
| | 2. | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 28.02.2018 அன்று மாலை 5.45 மணிக்குள் பெறப்படும். 28.02.2018 அன்று மாலை 5.45 மணிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். |
| | 3. | விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி<br>மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை,<br>கால்நடை பெருமருத்துவமனை வளாகம், புதுப்பாளையம் மெயின்ரோடு,<br>கடலூர்– 607 001. |
| | 4. | விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் ரூ.5/– அஞ்சல் வில்லை ஒட்டிய விண்ணப்பதாரரின் தற்போதைய இருப்பிட முழு முகவரியுடன் கூடிய அஞ்சல் உறையை ( Envelope ) இணைத்து அனுப்ப வேண்டும். |
| | 5. | அஞ்சல் உறை ( Envelope ) இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். |
| | 6. | விண்ணப்பத்தாரர்கள் கடலூர் மாவட்டத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். |
| 5 | | மனுவினில் அனைத்து விவரங்களும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். முழுமையான விவரங்கள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் சைக்கிள் ஓட்ட தெரிந்திருக்க வேண்டும் மற்றும் கால்நடைகளை கையாள தெரிந்திருக்க வேண்டும். |
| 6 | | நேர்முகத் தேர்வில் அதிக மதிப்பெண் (Merit) பெறும் விண்ணப்பதாரர்களின் சான்று சரிபார்க்கப்பட்டு இனசுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். |
| 7 | | விண்ணப்பம் ஏற்கப்பட்ட மனுதாரர்களுக்கு நேர்முக தேர்வு மாவட்ட அளவில் நடைபெறும். |
| 8 | | தேர்வு தொடர்பான எதையும் அல்லது எல்லாவற்றையும் மாற்றியமைப்பதற்கோ அல்லது தேர்வினை இரத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. |